# இரகசிய புதைகுழிகள் உடவலவ பகுதியிலும் கண்டுபிடிப்பு!

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள சூரியகந்த பகுதியில் இரகசிய புதைகுழிகளும், மனித எலும்புக் கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து நாட்டின் வேறு பகுதி...

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 23 இதழ் 325
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 7-1-1994

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
மாநகராட்சி
7-1-1994

## சிவில் பாதுகாப்பு நீக்கப்பட்டது

(கொழும்பு)

இரத்தினபுரி சூரியகந்த எனும் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட இரகசிய புதைகுழிகளுக்கும், மனித எலும்புக் கூடுகளுக்கும் வழங்கப்பட்டிருந்த சிவில் பாதுகாப்பை அரசு நீக்கிவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகைகளின் வாயை மூட அரசு கடும் முயற்சி

(கொழும்பு)

இரகசியப் புதைகுழிகள் மனித எலும்புக்கூடுகள் பற்றிய விபரங்கள் பத்திரிகைகளில் வெளிவருவதைத் தடுப்...

(3-ம் பக்கம் பார்க்க)

# ★ சமாதானத்தை ஏற்படுத்த அரசு-எதிரணி கூட்டு இணைந்த அமைச்சரவை ஒன்று தேவை!

## முன்னாள் படை அதிகாரியும், கல்விமான்களும் அரசிடம் கோரிக்கை!!

(கொழும்பு)

அரச தரப்பினரும், எதிர்க்கட்சியினரும் அங்கம்வகிக்கும் அமைச்சரவை ஒன்று உருவாக்கப்படவேண்டும். வடக்கு, கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் பணி இந்த அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்படவேண்டும். முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவரும் மற்றும் கல்விமான்கள்குழு ஒன்றும் அரசுக்கு இவ்வாறு கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

3-ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி விமான தாக்கு: காயமடைந்தவர்களில் மற்றொருவர் நேற்று மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 30ம் திகதி சாவகச்சேரியில் இடம்பெற்ற புக்காரா விமானக்குண்டு வீச்சுச்சம்பவத்தில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஹெலி துப்பாக்கி சூடு விறகு வியாபாரிகள் காயம்

(யாழ்ப்பாணம்)

கைதடிச் சந்தியில் நேற்று மாலை ஆறு மணியளவில் ஹெலிக்கொப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இரண்டுபேர் காயமடைந்தனர்.

விறகு வியாபாரிகளான கோண்டாவிலைச் சேர்ந்த சேலாயுதம் அரசரத்தினம் (வயது 18), உடுவிலைச் சேர்ந்த சிவமூர்த்தி சிவரஞ்சன் (19 வயது) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். -இ

## தாவடி, சாவகச்சேரி — விமானத் தாக்குதல் பற்றி இராணுவத்துக்கு எதுவும் தெரியாதாம்!

(கொழும்பு)

தாவடி, சாவகச்சேரி பகுதிகளில் ஸ்ரீலங்கா விமானப்படையினரின் விமானங்கள் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியது பற்றி தமக்கு எதுவும் தெரியாதென இராணுவ பேச்சாளர் ஒருவர் கூறியதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட மேற்படி தாக்குதலில் பலியான மற்றும்காயமடைந்தோர் விபரங்களையும் இராணுவம் நிராகரித்துள்ளது.

சாவகச்சேரி தாவடிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான விமானத்தாக்குதலில் ஏழு பொதுமக்கள் பலியானதும் பலர் காயமடைந்ததும் வீடுகள் கட்டிடங்கள் சேதமடைந்ததும் தெரிந்ததே.

இத்தாக்குதலின்போது விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள்குறித்து தெரிய

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக பிரச்சினைகளை அமைச்சர் அனுரா ஆராய்வு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் நிலவும் பிரச்சினைகளை சீர்செய்ய தற்கால கல்வி, உயர்கல்வி அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா தலைமையில் நேற்று கொழும்பில் மாநாடு ஒன்று நடைபெற்றது.

பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இம்மாநாட்டில் யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர் திரு அ. துரைராஜா உட்பட அனைத்து பல்கலைக்கழக உபவேந்தர்களும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் யாழ்.பல்கலைக்கழகம் உட்பட அனைத்து பல்கலைக்கழகங்களிலும் தற்போது நிலவிவரும் பிரச்சினைகள் பற்றி தனியாக ஆராயப்

(4-ம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்கு பற்றி அரசுக்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இறிலங்கா விமானப்படை குண்டுவீச்சு விமானங்கள் நடாத்திய விமானத் தாக்குதல் பற்றி சிறிலங்கா ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

குண்டு வீச்சு விமானங்கள்

(4ம் பக்கம் பார்க்க)

## அவசரகால சட்டவிதிகள் நேற்றுமுதல் நீக்கம்

(கொழும்பு)

நாடுமுழுவதும் அமுல்படுத்தப்பட்ட அவசரகால சட்டத்தின் சில சட்டவிதிகள் நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 21ம் திகதி அவசரகால சட்டம் நாடு முழுவதும் பிரகடனப்படுத்தப்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கையால் — சேதமடைந்த கட்டிடங்களின் மதிப்பீடுகள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த கட்டிடங்களின் சேதவிபரங்கள் பற்றிய மதிப்பீடுகளைப் பெற்றுத் தரும்படி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சகல பிரிவு உதவி அரசாங்க அதிபர்களையும் கோரியுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த வீடுகள் கட்டிடங்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது பற்றி ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள சகலபிரிவு உதவி அரசாங்க அதிபர்கள்

(4ம் பக்கம் பார்க்க)

## என்னைக் கொலை செய்ய இலங்கை அரசு சதி

— வை. கோ. தகவல்

(சென்னை)

என்னைக் கொலை செய்வதற்கு இலங்கை அரசு திட்டம் தீட்டி கொலைஞர்களை தமிழகத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக எனக்கு தற்போது இரகசியத் தகவல் ஒன்று

(4-ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### பழைய புத்தகங்கள்

ஒரு நல்ல வாசகர் தேர்ந்தெடுத்து வாசித்த தமிழ், ஆங்கில நாவல்கள், பல துறைக் கட்டுரை நூல்கள் உயர் வகுப்பு மாணவர்க்கேற்ற கணிதம், கலை, உளநூல், பௌதிகம், தமிழ், இந்து நாகரிகம் பாடநூல்கள் மலிவு விலையில். ஆனந்தா புத்தகசாலை, 236, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம். (எ 3738)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ். கே. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி- 602)

### வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு

நியூ வீக்ரேஸ் வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு 31-12-93 க்கு முன் எம்மிடம் திருத்துவதற்கு ஒப்படைத்த பொருள்களை 31-1-94 க்கு முன் பெற்றுக்கொள்ளவும். 31-1-94 க்குப் பின் அவற்றை மீளப்பெறமுடியாது என்பதை அன்புடனும், வேதனையுடனும் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி. நியூ வீக்ரேஸ் பி எம்' கி. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (கி-706)

விற்பனையாகிறது!

**அறிவுக் களஞ்சியம் 19**

(எ-3739)

## துப்பாக்கிச் சூடு மாணவன் காயம்

(பலா

இயக்கச்சி இராணுவ முகாமிலிருந்து கடந்த திங்கட்கிழமை இரவு படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மாசார்பகுதி மக்கள் என்னுமிடத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவர் படுகாயமடைந்தார்.

கோபாலபிள்ளை சசிதரன் (வயது 14) என்ற மாணவரே படுகாயமடைந்து பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (156-தி)

## திருவாசகம் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

சங்கானை - வெள்ளிக் கருமிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் திருவாசகப் பெருவிழா இம் மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அன்று காலை 6 மணிக்கு கடத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இருந்து மணிவாசகப் பெருமான் திருவுருவப்படம் சிவசுப்பிரமணிய தேவஸ்தானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி மு. சிவானந்தன் தலைமையில் விழா ஆரம்பமாகும். அருளாசியுரை வைத்திய கலாநிதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் நிகழ்த்த சிறப்புரைகளை நயினை க. நாகேஸ்வரன், திரு த சிவகுமாரன், ஞானபானு பிரம்மஸ்ரீ சாம் சோமஸ்கந்தசர்மா, தி. சிவதட்சிணாமூர்த்தி ஆகியோர் வழங்குகிறார்கள்.

உடுவில் கல்விப் பணிப்பாளர் சங்கீதபூஷணம் க. கணபதிப்பிள்ளையின் திருவாசகம் முற்றும் ஓதல் அன்று பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

-ம

## பாராட்டுவிழா

(அச்சுவேலி)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளையில் பல வருடங்களாகக் கடமையாற்றி ஓய்வுபெறும் திருமதி ஞானசௌந்தரியைக் கௌரவித்து சேவைநலன் பாராட்டு விழா கொன்று பிராந்திய முகாமையாளர் திரு. க. அப்புத்துரை தலைமையில் நடைபெற்றது. -59

## சைக்கிள் திருட்டு

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தில் தேசிய பயிலுனர் சபையின் பயிலுனராக பயிற்சி பெறும் யுவதி ஒருவரின் துவிச்சக்கரவண்டி கடந்த 4ம் திகதி செயலக பாதுகாப்பு நிலையத்திலிருந்து காணாமல் போய்விட்டது. -72-தி

UNIVERSAL AND COUNTRY

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

புதிய வகுப்புகள்
9-1-94 காலை 7-30 மணி முதல்
ஆரம்பமாகின்றன.

(ஏ-3734

சன்மார்க்கசபை - குரும்பசிட்டி

## சன்மார்க்க நுண்கலை மன்றம் ஓவிய சிற்ப பயிற்சி வகுப்புக்கள்

புதிய வகுப்புக்கள்
14 - 10 - 1994 காலை 10-00 மணிக்கு

ஆரம்பமாகின்றன. செயல் முறைகளுடன் விரிவுரைகளும் நடாத்தப்படும். விண்ணப்பப்படிவங்களை கே. கே. எஸ். வீதி சுன்னாகத்திலுள்ள தவலக்குமி புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம் க. பொ. த சாதாரண தரத்திலும் க. பொ. த. உயர்தரத்திலும், வடஇலங்கை நுண்கலைமன்றத்திலும் ஓவியத்தை ஒரு பாடமாக பயில்பவர்களிற்கு உதவும் வகையிலும் விரிவுரைகள் நடாத்தப்படும்.

வகுப்பு நேரம்: சனி, ஞாயிறு நாட்களில்
காலை 9-00 மணிமுதல் 12-00 மணிவரை

கலாகேசரி ஆ. தம்பித்துரை
பணிப்பாளர்

(ஏ 701)

# அறிவித்தல்

## யாழ். சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

## நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழாக்காணும் யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னோடிகள் ஸ்தாபகர், முகாமையாளர்கள், பணிப்பாளர்சபை உறுப்பினர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள் ஆகியோரைப் பாராட்டி கௌரவிக்கவுள்ளோம்.

எனவே மேலே குறிப்பிடப் பட்டவர்களைப்பற்றி அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை எமக்கு விளக்கமாக அறியத்தருவதுடன் அவர்களின் முகவரிகளை எமக்கு அறியத்தரவும்

குடாநாட்டிற்கு வெளியிலும், வெளிநாட்டிலும் உள்ளவர்களது உதவிகளைப் பெற்றுத்தருவதுடன் இவ்விழா சிறக்கவேண்டிய உதவிகளை வழங்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

செயலாளர்,
சேது விபுலானந்தா
பழையமாணவர் சங்கம்'
சந்தரோடை, சுன்னாகம்.
207, காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

203, 207 விஜயபிரசேவிஸ்
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

(ஏ 3746)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு (ஒப்பந்த அடிப்படையிலான) 1994 ஜனவரி 31 ஆம் தேதி வரை என்னுல் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

**1. பிரதிப்பதிவாளர்**
(ஒப்பந்த அடிப்படையில்)

சம்பள அளவுத்திட்டம்: 11,950/- மாதமொன்றுக்கு நிலையானது

தகைமைகள்: 15ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிருவாக அனுபவத்தைக் கொண்டுள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் சிரேட்ட உதவிப்பதிவாளர் / சிரேட்ட உதவிச் செயலாளர்.

அல்லது

விசேட திறமைகொண்ட தடைத் தேவைகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள ஏ-03 (ஏ) சம்பள அளவுத் திட்டத்தில் சம்பளம் பெறும் பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவின் / அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் சிரேட்ட உதவிப் பதிவாளர் / சிரேட்ட உதவிச் செயலாளர்.

குறிப்பு: நிருவாக அனுபவம் என்பதன் கருத்து இலங்கை நிருவாகசேவையிலுள்ள பதவியொன்றிலோ அதை யொத்த பதவியொன்றிலோ அல்லது கூறப்பட்ட உயர்ந்த பதவியொன்றிலோ அரசாங்க திணைக்களமொன்றிலோ அரசுகூட்டுத்தாபனமொன்றிலோ அல்லது நியதிச் சட்டசபை யொன்றிலோ பெற்றுக்கொண்ட அனுபவமாகும்.

தெரிவு: தேர்வு, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்.

**2. உதவிப்பதிவாளர்**
(ஒப்பந்தஅடிப்படையில்)

சம்பள அளவுத்திட்டம்: ரூபா 5,270/- மாதமொன்றிற்கு (நிலையானது)

தகைமைகள்: (அ) முதலாம் இரண்டாம் வகுப்பு ஆனர்சுடன் (Honours) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் பட்டம்.

அல்லது

(ஆ) பட்டப்பின் பட்டமொன்றுடன் அல்லது நிருவாகத்தில் அல்லது முகாமையில் டிப்ளோமாவுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம்.

தெரிவு: தேர்வு, நேர்முகப்பரீட்சை ஆகியவற்றின் மூலம்.

**3. உதவி நிதியாளர்:**
(ஒப்பந்தஅடிப்படையில்)

சம்பள அளவுத்திட்டம்: ரூபா 5,270/-மாதமொன்றுக்கு (நிலையானது)

தகைமைகள்: (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம்.

அத்துடன்

(ஆ) கணக்கியலும், அல்லது கணக்காய்வியலிலும் குறைந்தபட்சம் 3 ஆண்டு அனுபவத்துடன் இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் இடைத்தேர்வில் சித்தி.

அல்லது

(இ) கணக்கியலிலும் / அல்லது கணக்காய்விலும் குறைந்தபட்சம் 3ஆண்டு அனுபவத்துடன் ஐக்கிய இராச்சியத்தின் செலவு, முகாமைத்துவக் கணக்காளர் பட்டய நிறுவகத்தின் ஆரம்ப நிலையின் அ, ஆ பிரிவுத்தேர்வுகளிலும் உயர் தொழில் நிலைத் தேர்வுகளில் பகுதி 1 இலும் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் சான்றிதழ் அளிக்கப் பெற்றுக் கூட்டிணைக்கப்பெற்ற கணக்காளர் சங்கத்தின் பகுதி 1, பகுதி 11, பகுதி 111 தேர்வுகளில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) கணக்கியலிலும் / அல்லது கணக்காய்விலும் குறைந்தபட்சம் மூன்றாண்டு அனுபவத்துடன் இலங்கை தொழில் நுட்பக்கல்லூரியின் கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா;

தெரிவு: தேர்வு நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்

மேற்குறித்த சம்பளங்களுடன் சம்பளத்தின் 25 சதவீதத்திற்குச் சமனான தொகை 1994, டிசெம்பர் 31 ஆம் தேதி வரை வழங்கப்படும்

1993 மார்ச்சு 15 ஆம் தேதிய 564 ஆம் இலக்க ஆணைக்குழுவின்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க மாதாந்தப் படியாக பிரதிப்பதிவாளர் பதவிக்கு 750/- ரூபாவும் உதவிப்பதிவாளர் பதவிக்கும் உதவி நிதியாளர் பதவிக்கும் 600/- ரூபாவும் செலுத்தப்படும்

1993 மே 12ம் தேதிய 9 / 93ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க மாதாந்தப்படியாக ரூபா 600/ செலுத்தப்படும்.

விண்ணப்பங்கள் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் 20/ ரூபாவை பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள்வங்கியில்செலுத்தி இப்பல்கலைக் கழகத்தின் சிரேட்ட உதவிப்பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் செய்யப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக் கட்டளை / தபாற் கட்டளையுடன் 23 x 10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பம் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரர்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுதேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் தேளிவில்லாதவாறு விபரங்கள் அளிக்கப்படுகின்ற விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குறிப்பு: ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களும் மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1994-01-05

(ஏ 3745)

மனிதவாக்கு

அசைக்க முடியாத உறுதியும் திடசித்தமும் கொண்டவன் உலகைத் தன் வழியில் தானே உருவாக்கிக் கொள்வான்.
- யோஹென் கேதே

## நமது நோக்கு

### கொடூரம் தொடருவது ஏன்?

தாளடி, சாவகச்சேரிப் பகுதிகளில் குண்டு வீச்சு நடைபெற்றிருக்கின்றது; அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

"தொடர்ந்து நடத்தப்படும் குண்டு வீச்சுகள் எந்த வகையிலும் அரசினால் நியாயப்படுத்தவே முடியாது!" எனக் கொழும்பிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அண்மையில் தான் கடிதமூலம் கண்டனம் தெரிவித்திருந்தார்.

ஜனநாயக நீரோட்டத்தில் பல தமிழ்க் கட்சிகளும் இணைந்துள்ளன; ஒரு சிலரே பயங்கரவாதத்தில் ஈடுபட்டு வருகிறார்கள் என அரசு உலகிற்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றது.

ஆனால், ஜனநாயகத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்க் கட்சிகள் எழுப்பும் கண்டனக் குரல்களை, அரசு தைசாக, மூடி மறைத்து வருகிறது.

ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி, பிரியாவிடைப் பேச்சிலே, தனது இறுதிப் போதனை எனக் கூறியதென்ன?

"அரசியல் தீர்வுக்கு முன்னோடியாக இராணுவ வெற்றி நிலைநாட்டப்பட வேண்டும்!"

உலகில், பல நாடுகளிலும் இத்தகைய போர்கள் நடக்கின்றன. ஆனால், அரசுகள் இராணுவ வெற்றிக்காகக் காத்திருப்பதில்லை.

யுத்த நிறுத்தம் அறிவித்து, பேச்சுவார்த்தை நடாத்திப் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகவே செய்திகள் வரும்.

உலகப் போக்கை இலங்கை அரசு உணர மறுப்பதேன்?

இராணுவ வெற்றி என்றால் என்ன? போரிடும் இரு பகுதியினரில் ஒரு பகுதி வெற்றி பெறும்; மற்றப்பகுதி சரணாகதி அடையும்.

சரணாகதிக்குப் பின் அரசியல் தீர்வா? இராணுவ வெற்றிக் களிப்போடு, ஆயுதங்களை நீட்டிக் கொண்டு, சரணாகதி அடைந்த ஆயுதமற்ற அடிமைகளோடு, சமாதானப் பேச்சா?

அத்தகைய பேச்சுவார்த்தைக்கா அரசு கனவு கண்டு கொண்டிருக்கின்றது?

இத்தகைய மனப்போக்கை இராணுவத்தினர் கொண்டிருக்கும் போது எத்தகைய செயற்பாடுகள் நாட்டில் இடம் பெறும்?

அடிக்கடி, பொதுமக்கள்மீது கட்டுமிராண்டித்தனமான கொடூரங்கள் தான் கட்டவிழ்த்துவிடப்படும்!

உலக நெருக்குதல்கள் இந்த மனப்போக்கை மாற்ற முயலுமா?

# புலிகளே தமிழரின் ஏக பிரதிநிதிகள்

## இலங்கை அரசு அவர்களுடன்தான் பேசவேண்டும்

### 'புரண்ட்லைனில்' வாசகர் கடிதம்

(சென்னை)

இலங்கையில் சுதந்திரம் கோரிப் போராடிவரும் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் தான் என அண்மையில் வெளிவந்த "புரண்ட் லைன்" சஞ்சிகையில் மக்கள் கருத்துப்பகுதியில் வடஇந்திய மாநிலம் ஒன்றைச் சேர்ந்த வாசகர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த வாசகர் எழுதிய கடிதத்தின் விபரம் வருமாறு:

'புரண்ட் லைன்' சஞ்சிகையின் 1993-ம் ஆண்டு அக்டோபர் 22ம் திகதி இதழில் அதன் ஆசிரியர் திரு. என். ராம் "இறிலங்காவின் இனிய யுத்தம்" எனும் தலைப்பில் ஆசிரியர் தலையங்கம் எழுதியிருந்தார்.

அதில் இலங்கை அரசும், இராணுவமும் தமிழ்மக்களைத் தம் பக்கம் திரும்ப விடுதலைப் புலிகளுடன் யுத்தம் புரிந்து பயங்கரவாதத்தை ஒழிக்கப் பாடுபடுகிறார்கள் எனக் கூறி அதனை நியாயப்படுத்தும்விதத்தில் எழுதியுள்ளார். இதனைப் படிக்கும் பொழுது மிகவும் வேதனைப்பட்டேன் உண்மை நிலை இதுவெனத் தெளிவுபடுத்தப் படவில்லை.

பலஸ்தீனியருக்கு ஒரு பி. எல். ஓ. தென்னாபிரிக்க கறுப்பின மக்களுக்கு ஒரு ஏ. என். சி. வட அயர்லாந்தில் ஒரு ஐ. ஆர். ஏ போலத்தான் இலங்கைத் தமிழருக்கு எல். ரி. ரி. ஈ (விடுதலைப் புலிகள்)

பல வருடங்களாக இழுபட்டுக்கொண்டிருக்கும் இந்த விரோதத்தை இலங்கை அரசு இறந்த தமிழர் விடுதலைக் கூட்டணியுடனா? உயிர் இல்லாத ரெலோவுடனா? தொண்டமானுடனா? அல்லது அடுத்த இந்தியப் பிரதமருடனா பேசித் தீர்க்கப்போகிறது

இதுபோன்ற அர்த்தமற்ற கருத்துக்களை சுப்பிரமணிய சுவாமியும், முன்னாள் அமைச்சர் பி. சிதம்பரமும் கூறிவருவது ஆச்சரியமில்லை ஒரு 'ராம்' 'டிக்' அல்லது 'ஹரி' இப்படி எழுதினால் அதைப் புரிந்து கொள்ளலாம், ஆனால் இலங்கைப் பிரச்சினையை "உள்ளங்கை நெல்லிக் கனியாகத் தெரிந்தவர்களே" இப்படி பேசுவதும் எழுதுவதும் கொடூரமும் மன்னிக்கமுடியாததுமாகும். எப்படி இதுபோன்று (என் ராம்) நீரும் எழுதவீர்

நானும் புலிகளின் போக்கினை ஆதரிப்பவனல்ல. ஆனால் நீங்களும் நாங்களும் விரும்பினால் என்ன விரும்பாவிட்டாலென்ன விடுதலைப் புலிகள் தான் இலங்கைத் தமிழரின் ஏக பிரதிநிதிகள் எந்தவிதத்திலும் இலங்கை அரசு புலிகளுடன் தான் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்.

விடுதலைப் புலிகள் தோன்றுவதற்கு முன் இலங்கையில் கலவரங்கள் ஏற்பட்டபோதெல்லாம் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர். பட்டப் பகலில் தமிழ்ப்பெண்கள் நட்ட நடு ரோட்டில் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டது உமக்குத் தெரியாதா? புலிகளைப் பற்றி விமர்சனம் செய்வதற்கு உமக்கு உரிமை உண்டு. ஆனால் சமாதானப் பேச்சு மேடையிலோ அல்லது சர்வதேச மேடையிலோ புலிகள் தமிழ் மக்களுக்காக பேசுவதற்கு அதிகாரமில்லை என்று கேட்கவோ அல்லது புலிகளின் அதிகார உரிமையை மறுக்கவோ உம்மால் முடியாது.

பி. எல். ஓ. (பலஸ்தீன விடுதலை அமைப்பு) ஒரு பயங்கரவாத அமைப்புத்தான் (அல்லது காந்திய வழியில் செல்கிறார்களா), அப்படியாயின் இந்தியா ஏன் பி. எல். ஒவை அங்கீகரித்தது? பலஸ்தீன மக்களின் விருப்பத்தை உண்மையாக புலப்படுத்தும் ஒரே பிரதிநிதிகள் என்ற முறையில் தான். இந்திய அரசு இந்தியாவில் புலிகளை தடை செய்துள்ளது. இன்று வரை அமெரிக்காவும் பி. எல். ஓ வை தடை செய்துள்ளது. ஆனால் வரலாற்றுச் சம்பவங்களை அதனால் மாற்ற முடியுமா?

இவ்வாறு காரசாரமாக அக் கடிதம் 'புரண்ட் லைன்' ஆசிரியர் திரு. என். ராமைச் சாடியுள்ளது.

-சி

### இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய விஞ்ஞான தினம் "அறிவியல் கதிர்" வெளியீடு இன்று 7ம் திகதி மு. ப 11 மணிக்கு நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக திரு அ. பஞ்சலிங்கம் கலந்து கொள்வார்.

0 3 0

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்திவரும் வாராந்தர நிகழ்வுகளில் இன்று 7ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் சரணவாய் மகாவித்தியாலய அதிபர் சித்தாந்த பண்டிதர் சி. வேலாயுதம் 'வள்ளி மணவாளன்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். அறிமுக உரையை எஸ். சிவகுருநாதன் நிகழ்த்துவார்.

-ம

### சடலம் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் அநாதரவான நிலையில் இறந்த வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இனந்தெரியாத இச்சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

-இ

### இராசிபலன்

7-1-1994
வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு மார்கழி 23)

தசமி ந. ப. 12-31 வரை சுவாதி மு. ப. 7-34 வரை விசாகம் வைகறை 6-08 வரை இராகுகாலம் காலை 11-02 முதல் 12-32 வரை சுபநேரம் காலை 6-32 முதல் 8-02 வரை.

மேடம்- குடும்ப ஒற்றுமை, கௌரவம், முயற்சிவெற்றி.

இடபம்- பதவி உயர்வு, சுபச் செலவு, தொழில் முதலீடு.

மிதுனம்- முயற்சிகளில் சலனம், நிம்மதியின்மை, அலைச்சல்.

கடகம்- உடல்நல பாதிப்பு, நண்பர் துரோகம், மனவெறுப்பு.

சிங்கம்- புத்திர வழியால் நன்மை, தொழில் லாபம், இனசன பெருமை.

கன்னி- கருத்து வேறுபாடு, பகைவர் துன்பம், தானதர்மம்.

துலாம்- புதிய பொறுப்பு, திடீர் செலவு, பணப்புழக்கம்.

விருச்சிகம்- காரிய தடை, பண நெருக்கடி, சிறு சச்சரவு.

தனுசு- கல்வி முன்னேற்றம், சமரச முயற்சி, வாக்குவன்மை.

மகரம்- பிறர் அறிவுரை, சுபகாரியம், தாய்ப்பாசம்.

கும்பம்- தொழில்கெடுபிடி, மனக்குழப்பம், வாக்குத் தவறுதல்.

மீனம்- உறவினர் கஷ்டம், மனக்கசப்பு, தீராததொல்லை.

— ஜோஸ்யர்.

### பத்திரிகைகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கு அரசு இப்போது கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக நவ சமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்காரா குற்றஞ் சாட்டியுள்ளார்

அரசு இது சம்பந்தமாக இப்போது பலவிதமான நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றது.

திரு. வாசுதேவநாணயக்கார இதுபற்றி பி. பி. சிக்குத் தெரிவிக்கையில்

பத்திரிகைகளில் இந்த இரகசிய புதைகுழிகள் பற்றி வெளிவருவதை அரசு தடை விதித்துள்ளது.

இலங்கை முழுவதும் சந்தேகத்துக்கிடமான இடங்கள் அனைத்தும் தோண்டிப் பார்க்கப்படவேண்டும். அவ்வப்பகுதி பொதுமக்களே இதனைச் செய்யவேண்டும்.

தோண்டப்படும் பகுதிகளில் சடலங்களும் எலும்புக் கூடுகளும் காணப்படும் பட்சத்தில் அதுபற்றி உடனே அப்பகுதி மஜிஸ்ரேட்டுக்கு அவர்கள் அறிவிக்கவேண்டும் என்றார்.

—இ

### சமாதானத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு கிழக்கு யுத்தத்தின் காரணமாக பெருமளவு மனித உயிர்கள் அழிகின்றன. பலகோடி ரூபா சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுகின்றது. எனவே இந்த யுத்தத்திற்கு ஒரு முடிவை ஏற்படுத்தி நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட வேண்டும் இதன் பொருட்டு அமைதிக்கும் சமாதானத்துக்குமான அமைச்சரவை ஒன்று அமைக்கப்படவேண்டும்.

இந்த அமைச்சரவை உருவாக்கப்பட்ட பின் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

இந்த வருடத்தில் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தமும் கொண்டுவரப்படவேண்டும். இதன் மூலம் இந்த நாட்டின் சகல இனமக்களுக்கும் நீதிவழங்கப்படவேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரியும், கல்விமான்களும் அரசைக்கேட்டுள்ளனர்.

டாக்டர் நாத் அமரசேகர, விக்டர் எஸ். வீரசிங்க, டபிள்யூ பீ. ஏ. ஜயசேகர, டாக்டர் ஸ்டீபர் பீரிஸ், பேராசிரியர் ஏ. ஏகநாயக, பேராசிரியர் ஜெஹான் பெரேரா, டாக்டர் ஏ. டி. ஆரியரத்ன ஆகியோர் உட்பட பல கல்விமான்கள் அரசுக்கு இவ்விதம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

-இ

### காய்ச்சல், கொலராவுக்கு இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடுமையான காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட குழந்தை ஒன்று யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரும் போது வழியில் மரணமானது.

கொடிகாமத்தைச் சேர்ந்த ப. சதீஸ்குமார் (வயது 3) என்றஆண்குழந்தையே மரணமானது. குழந்தையின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை கொலராவினால் பாதிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த யாழ்ப்பாணம் நாவலர் வீதி சந்திப்பகுதியைச் சேர்ந்த எஸ். இராசதுரை (வயது 78) என்ற வயோதிபர் நேற்று மரணமானார்.

இவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படாது ஆஸ்பத்திரியில் இருந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டது. (சி)

### "நலமுடன் வாழி நீடு"

தாயகம் துர்க்கை அடிபணிந்தே
தமிழின வாழ்வினிலுழைப்போய்
ஆய்ந்து பல நூல் கற்றுணர்ந்து
அழகுற அதை உரைப்போய்
நோய்நொடி மிடியினால்
நொந்தோர்க்குதவுவோய்
தாயே நற்செல்வி தங்கம்மாவே
தவச்சிறப்புடன் வாழி நீடு

சி. சபாநாதன்

(இன்று பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 69-வது பிறந்த நாளாகும்.)


**BOND INSTITUTES**
யாழ்ப்பாணம்

★ ஆண்டு 4 முதல் O/L வரை ஒவ்வொரு வகுப்பிலும் 35 மாணவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

(எமது வழமையான ஆசிரியர் குழு)

★ மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளுடன் புதிய வகுப்புகள் ஆரம்பம்.

9-1-94 (ஞாயிறு) (இ 704)

# தமிழக அரசை கலைக்குமாறு மத்திய அரசிடம் வலியுறுத்து

(சென்னை)

தமிழக அரசு பல்வேறு துறைகளில் தோல்வியுற்று இருப்பதால் அதை கலைத்து விடுமாறு மத்திய அரசிடம் மாநில இ. காங்கிரஸ் கமிட்டி வற்புறுத்தும் என்று அதன் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர் மகாநாட்டில் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார். மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு மாநில அரசு அதிக கவனம் செலுத்தவில்லை என்றும் அவர் மேலும் குற்றம் சாட்டினார்.

சட்டமன்ற இ. காங்கிரஸின் தலைமை முடிவை மீறி பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஆறு இ. காங்கிரஸ் உறுப்பினர்கள்மீது இம்மாத இறுதிக்குள் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தமிழ்நாட்டின் ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டிக்கு எதிராக மோதல் போக்கை கடைப்பிடித்து வருவதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவையும் அவர் குறை கூறினார். —பி-இ

## கிழக்கு மாகாண தேர்தல்

# எட்டு நியமனப் பத்திரங்கள் இதுவரை தாக்கல்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் எட்டு உள்ளூராட்சிமன்றங்களுக்கான எட்டு நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன

அம்பாறை நகரசபை, மகாஓயா பிரதேசசபை, லகுகல பிரதேச சபை, நமல்ஓயா பிரதேச சபை, பதியதலாவ பிரதேசசபை ஆகியவற்றுக்கான நியமனப் பத்திரங்களை ஐக்கிய தேசியக் கட்சி தாக்கல் செய்துள்ளது.

மேலும் திருகோணமலை மாவட்டத்தில் சேருவில பகுதிக்கு சுயேட்சைக்குழு ஒன்று நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளது

காத்தான்குடி, மகாஓயா, சேருவில பிரதேச சபைகளுக்கு மூன்று சுயேட்சைக் குழுக்கள் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளன. -க-இ

### அவசரகால

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தின் மீது அல்லது ஜனாதிபதிமீது வெறுப்பை ஏற்படுத்தல், அரசாங்கத்துக்கு அல்லது ஜனாதிபதிக்கு எதிராக தூண்டிவிடுதல் என்பது சம்பந்தமான பிரிவுகளே நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

அவசரகாலச் சட்டத்தின் ஏனைய சட்டவிதிகள் அனைத்தும் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கும் துண்டுப் பிரசுரங்கள் சுவரொட்டிகள் என்பனவற்றை விநியோகிப்பது சம்பந்தமான செயல்கள் இந்தப் பிரிவில் அடங்குமெனத் தெரிவிக்கப்பட்டது. (இ)

### விமான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூலை தாவடி மற்றும் சாவகச்சேரிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல் பற்றியும் இதனால் ஏற்பட்ட உயிரிழப்புகள் சேதங்கள் பற்றிய விபரங்களும் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வணசிங்க ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

இதுபோன்ற கண்மூடித்தனமான தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுவதை இருப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -162-158-இ

### இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏனைய பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

யாழ் மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் இலங்கை விமானப்படை குண்டு வீச்சு விமானங்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மற்றும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களால் சேதமடைந்த கட்டடங்களின் மதிப்பீடுகளை வெகு விரைவில் பெற்றுத் தருமபடி கலை உதவி அரசாங்க அதிபர்களும் கேட்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. (162-இ)

### யாழ். பல்கலைக்கழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

இம்மாநாட்டில் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா உரையாற்றுகையில் இலங்கையிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் தற்போது நிலவிவரும் பிரச்னைகள் அனைத்தும் தக்கமுறையில் தீர்த்து வைக்கப்படும்.

அனைத்து உபவேந்தர்களும் மாதாமாதம் பங்குபற்றும் ஒரு கூட்டம் நடாத்தப்பட்டு பிரச்னைகள் விரிவாக ஆராயப்பட்டு தீர்வு காணப்படுமென்று கூறினார். (வி இ)

# கப்பல்வரும் திகதிகள்பற்றி முரணான தகவல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்குத் தேவையான பொருட்களை ஏற்றி கொண்டு திருகோணமலையிலிருந்து கப்பல்கள் புறப்படும் திகதிகள் குறித்து முரணான தகவல்கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படுவதாக அரச அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்

கப்பல்கள் பருத்தித்துறை நோக்கிப் புறப்படும்போது முதலில் ஒரு திகதி அறிவிக்கப்படுவதாகவும் ஆனால் அந்தக் கப்பல் வேறு ஒருதிகதியில் புறப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது கொழும்பில் பொருட்களை ஏற்றிக்கொண்டிருக்கும் வாதுவ கப்பல் பருத்தித்துறையை நோக்கி எதிர்வரும் பதினொராம் திகதியே புறப்படும் எனவும் கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இக்கப்பலில் யாழ். மாவட்டத்துக்கான 500 தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. -153-இ

### காயமடைந்தவர்களில்

1-ம் பக்கத் தொடர்ச்சி

சரசாலை வடக்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை நமசிவாயம் (வயது-55) என்பவர் நேற்று ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இச்சம்பவத்தில் இறந்தோரின் எண்ணிக்கை இவருடன் சேர்ந்து 11 ஆக அதிகரித்துள்ளது.

# மா கப்பல் இன்று வருகிறது

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை துறைமுகத்திலிருந்து மா ஏற்றிக்கொண்டு மகோ கப்பல் இன்று காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது -162-158-இ

### என்னைக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்துள்ளது.

இவ்வாறு திரு. வை. கோபாலசாமி சென்னையில் திருவண்ணாமலையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கூறினார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்,—

இலங்கை அரசின் உளவுத்துறை பிரிவினர் என்னைக் கொலை செய்வதற்கு திட்டம் தீட்டி கொழும்பில் உள்ள தமிழ் பேராளி குழுக்களில் ஒரு சிலரை தமிழகத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக நான் அறிகின்றேன்.

விடுதலைப்புலிகளுடன் எனக்குஎந்தவிதமானதொடர்பும் கிடையாது என்று நான் ஆயிரம் தடவை சொல்லிவிட்டேன். இருந்தும் என்னைக் கொலை செய்வதற்கு இலங்கை அரசு தற்போது திட்டம் தீட்டி இருக்கிறது என்று திரு. கோபாலசாமி கூறினார். —வி-இ

### தாவடி சாவகச்சேரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விக்லையென கொழும்புத் தகவல்களை ஆதாரம் காட்டி வெளித்தாஸ் மேலும் தெரிவித்தது. -இ

### கிவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கோரிக்கை ஒன்றின் பேரிலேயே மேற்படி பகுதிக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது,

இந்த இரகசிய புதைகுழிகள் பற்றிய மேலதிக விசாரணையை எம்பிலிப்பிட்டிய மாஜிஸ்திரேட் நாளை 8-ம் திகதி நடத்தவிருந்தார். அன்று வரை பொலிசார் அப்பகுதியின் பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்டனர். எனினும் ஸ்ரீ. ல. சு. கட்சியின் கோரிக்கையின் பேரில் பொதுமக்கள் அடங்கியகுழுவில் பாதுகாப்பாளர்களும் அப்பகுதிக்கு நியமிக்கப்பட்டனர்.

நேற்று நண்பகல் 12 மணி முதல் இந்த சிவில் பாதுகாப்பாளர்கள் அந்தப் பகுதியில் இருந்து நீக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரத்தினபுரி பொலிஸ் அதிகாரியின் உத்தரவின்பேரில் இந்தப் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது. பொலிஸ் பாதுகாப்பு மாத்திரமே இப்போது அங்கு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (இ)

## ராஜீவ் கொலை வழக்கு:

# 1000க்கும் அதிகமானோர் அரசதரப்பில் சாட்சியம்

(சென்னை)

அடுத்த மாதம் மீண்டும் ஆரம்பமாகவிருக்கும் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அரசதரப்பில் சாட்சியமளிக்கவுள்ளனர்.

இவர்களின் பெயர்பட்டியலை அரசதரப்பு வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததும், உத்தியோகபூர்வமாக இவர்களுக்கு 'சம்மன்ஸ்' அனுப்பப்பட இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் தீர்ப்பு இவ்வருட இறுதிக்குமுன் கூறப்பட்டுவிடுமென்றும் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (வி இ)

## சக்கோட்டை சம்பவம்:

# இரு மீனவர் சடலங்கள் நேற்றும் மீட்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் சக்கோட்டைக் கடற்பகுதியில் கடந்த 4ம் திகதி கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலின்போது காணாமல் போனஏழு மீனவர்களில் மேலும் இரு மீனவரது சடலங்கள் நேற்றுமாலை மீட்கப்பட்டன.

இச்சடலங்கள் நேற்று மாலை 5-00மணியளவில் பருத்தித்துறை முனைகடற் பகுதியில் கரை ஒதுங்கின.

ஏழு பிள்ளைகளின் தந்தையான சின்னப்பொடியன் சலிங்கம் (வயது 42), இரண்டு பிள்ளைகளின் தந்தையான தியோசப்பிள்ளை அன்ரன் (30 வயது) என்ற இரு மீனவர்களின் சடலங்களுமே நேற்று மாலை மீட்கப்பட்டன.

பாலசிங்கத்தின் பிடரியில் பாரதூரமான காயங்களும் அன்ரனின் முகத்திலும் உடலிலும் பல கீறல் காயங்களும் காணப்பட்டன. இவ்விரு மீனவர்களும் பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறைக்கு வந்து சக்கோட்டைப் பகுதியில் தஞ்சமடைந்தவர்களாவர்.

சக்கோட்டையைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை இருதயசாமி (வயது 17), வின் சடலமும், தேவதிரவியம் ஜெயரட்ணம் என்பவரின் சடலமும் ஏற்கனவே கண்டெடுக்கப்பட்டன. காணாமல்போன ஏனைய மீனவர்களை தேடும்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, (52இ

### இரகசிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விலும் இத்தகைய இரகசிய புதைகுழிகள் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதென ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

உடவலவ பகுதியில் இத்தகைய இரகசிய புதைகுழிகளும் மனித சடலங்களும் இருப்பதாக இப்போது புதிய தகவல் அந்தப் பகுதி மக்களிடமிருந்து வெளியாகியுள்ளது.

உடவலவ தேசிய வனப் பூங்காப்பகுதிக்கு அடுத்துள்ள பகுதியில் இந்த இரகசிய புதைகுழிகளும் சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஹம்பாந்தோட்டை மாவட்ட எம்.பி. மகிந்த ராஜபக்ஸ, நவசம சமாஜக் கட்சியைச் சேர்ந்த இரத்தினபுரி மாவட்ட எம். பி. வாசுதேவ நாணயக்கார இத்தகவலை தெரிவித்ததையடுத்து எம்பிலிப்பிட்டிய மாஜிஸ்ரேட் பி. ரணசிங்க முன்னிலையில் மனித எலும்புக் கூடுகள் அந்தப் பகுதியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் 40க்கும் மேற்பட்டோரின் சடலங்களும். எலும்புக்கூடுகளும் புதையுண்டு கிடப்பதாக இப்போது சந்தேகிக்கப்படுகின்றது

ராணுவ வாகனம் ஒன்றிலும் மற்றும் இரண்டு வாகனங்களிலும் மனித சடலங்கள் அந்தப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டதைத் தான் நேரில் கண்டதாக அப்பகுதி வாசியான எஸ். பி. நந்தசேன மாஜிஸ்ரேட் முன்னிலையில் தெரிவித்துள்ளார். (இ)

## செப்ரிசிமியா:

# இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

செப்ரிசிமியா நோயின் தாக்கத்திற்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இருவர் நேற்று அங்கு மரணமாயினர்.

மீசாலையைச் சேர்ந்த சரவணமுத்து இராசையா (வயது-60) நீர்வேலியைச் சேர்ந்த வாமுத்து பொன்னம்பலம் (வயது 62) ஆகிய இருவருமே மரணமானவர்களாவர். (இ)

# கண்ணீர் அஞ்சலி

## சிவநெறிச்செம்மல்

## அமரர் ச. நமசிவாயம்

(உரிமையாளர், அம்பிகா டிஸ்பென்சரி, சாவகச்சேரி)

சரசாலை—நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய பரிபாலன ஸ்தாபகரும், பிரதம இயக்குநரும், சரசாலை இந்துமன்ற காப்பாளருமான சிவநெறிச்செம்மல் அமரர் ச. நமசிவாயம் அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவிக்கின்றோம்.

சரசாலை—நுணுவில்
சிதம்பரவிநாயகர் ஆலய பரிபாலன சபை
சரசாலை இந்துமன்றம்
சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் & புத்தகசாலை,
சாவகச்சேரி.

(இ-706)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered a ua News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B